இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 85 – ஒலி: 66 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 29 – வெள்ளிக்கிழமை 16 அக்டோபர் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 66 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 29 - Friday 16 October 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

கைதான காக்ரோச் ஜனதா கட்சியின் அசுதோஷ் ரங்கா – சௌரவ் தாஸுக்கு எனது ஆதரவு!

எத்தனை இளைஞர்களின் குரலை பா.ஜ.க.வால் ஒடுக்க முடியும்?

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வினா!

சென்னை, அக்.16 –

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்க வலியுறுத்தி போராட்டம் நடத்திய காக்ரோச் ஜனதா கட்சியின் அசுதோஷ் ரங்கா மற்றும் சௌரவ் தாஸ் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டது தொடர்பாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பதிவில், 'அவ்விருவருக்கும் எனது ஆதரவும் தோழமையும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

காக்ரோச் ஜனதா கட்சியின் அசுதோஷ் ரங்கா, சௌரவ் தாஸ் ஆகியோர் கைதாகி ஐந்து நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப் பட்டனர்.

போராட்டம் நடத்துவதற்கான இடமாக ஜந்தர் மந்தர் ரத்து செய்யப்பட்ட மறு நாளே, அங்கு நுழைய முயன்றதாகக் கூறி டெல்லி காவல்துறையினர் இருவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர்.

லைவ் லா செய்தியின்படி, டெல்லி சிறப்பு நிர்வாக மாஜிஸ்திரேட் நீதிமன்றம் இருவரையும் 5 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டது.

இதுகுறித்து காக்ரோச் ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜித் திப்கே, எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "அசுதோஷும் சௌர வும் ஐந்து நாள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களது குற்றம் என்ன? ஜந்தர் மந்தரில் தேசியக் கொடியை காட்டியதுதான்" என்றார்.

மேலும், "நரேந்திர மோதி, கொஞ்சமா வது துணிச்சலைக் காட்டுங்கள். எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவதில் நீங்கள் இவ்வளவு உறுதியாக இருந்தால்,



கோழைத்தனமான உத்திகளுக்குப் பின்னால் ஒளிந்துகொள்ளாமல், அவசர நிலையை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் துணிச்சலைக் காட்டுங்கள்," என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "எங்கள் தலைவர்களான அசுதோஷ், சௌரவ் ஆகிய இருவரையும் ஐந்து நாட்கள் சிறையில் அடைத்தால் அவர்கள் அச்சமடைந்து விடுவார்கள் என்று அரசு நினைத்தால், அது தவறான எண்ணம். அவர்கள் தலைநிமிர்ந்தபடியே சிறைக்குள் செல்கிறார்கள். தாங்கள் அஞ்சப் போவதில்லை என்பதை நாட்டு மக் களுக்குத் தெரிவித்துள்ளனர்," என்று அஜின்க்யா ஷிண்டே கூறினார்.

இதற்கிடையே கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவொன்றில் கைதான இருவருக்கும் ஆதரவை தெரிவித்தும், பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (14.10.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



அவர்கள் சிறையில் அடைக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, எந்த அரசியல் கட்சியையும் சாராத சாதாரண பொதுமக்களும் பெருமளவில் வீதிக்கு வந்து, மக்கள் சக்தி என்னவென்பதை அவர்களுக்குக் காட்டுவார்கள்!

அஷுதோஷ் ரங்கா மற்றும் சவுரவ் தாஸ் ஆகியோருக்கு எனது ஆதரவும் தோழமையும்! அவர் களுக்குத் தேவையான அனைத்துச் சட்ட உதவிகளை வழங்கவும், வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்ய வும் தி.மு.க. தயாராக உள்ளது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சி.ஜே.பி. நன்றி!



டெல்லி போராட்டத்தில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிராக குரல் கொடுத்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கரப்பான் பூச்சி ஜனதா கட்சி நன்றி தெரிவித் துள்ளது. இதுதொடர்பாக அக்கட்சியின் தலைவர் அபிஜித் தீப்கே வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அசுதோஷ் ரங்கா, சவுரவ் தாஸ் உள்ளிட்ட சி.ஜே.பி. நிர்வாகிகள் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டுள்ளதற்கு எதிராக குரல் கொடுத்துள்ள தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

எத்தனை போராட்டக்காரர்களை இந்த அரசால் கைது செய்ய முடியும்? எத்தனை இளைஞர்களின் குரலை பா.ஜ.க.வால் ஒடுக்க முடியும்?

பண்டிகையை முன்னிட்டு மறைமலை நகர் தற்காலிக பேருந்து நிலையம்!

பொதுமக்கள் அதிர்ச்சி!

சென்னை, அக். 16- சென்னையில் வசிக் கும் லட்சக்கணக்கான வெளி மாவட்ட மக்கள் பண்டிகைக் காலங்களில் தங்களது சொந்த ஊர் களுக்குச் செல்ல அரசுப் பேருந்துகளைப் பயன் படுத்துகின்றனர்.

இதனால், சென்னை யில் இருந்து வெளியூர் களுக்குச் செல்லும் பேருந்து களில் கடும் கூட்டம் காணப்படுவது வழக்கம். இதைக் கருத்தில் கொண்டு, கடந்த திமுக ஆட்சியில், கலைஞர் நகர், தாம்பரம், பூந்தமல்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து சிறப்புப் பேருந் துகள் இயக்கப்பட்டன.

இதன் மூலம், பயணி கள் தங்களுக்கு அருகில் உள்ள பேருந்து நிலை யங்களுக்குச் சென்று பேருந்துகளில் ஏறிச் செல்லும் வசதி இருந்தது.

ஆனால், தற்போது ஆயுத பூஜை மற்றும் தீபா வளி பண்டிகைகளுக்கான சிறப்புப் பேருந்து ஏற்பாடு களில் தவெக அரசு குளறு படிகளை அரங்கேற்றி யுள்ளது.

அதன்படி சென்னைக்கு வெளியே மறைமலை நக ரில் தற்காலிகப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது. இதனால் சென்னை யின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் கடும் சிரமத்துக்கு ஆளாக வுள்ளனர்.

இந்நிலையில், த.வெ.க. அரசின் முடிவால் பொது மக்கள் அதிர்ச்சியடைந் துள்ளனர். சென்னையி லிருந்து 41 கிலோ மீட் டர் தொலைவில் தற்கா லிக பேருந்து நிலையம் அமைப்பது எந்தவகை யில் நியாயம் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் ஏற்கெனவே சென்னை யின் முக்கியச் சாலை களில் போக்குவரத்து நெரி சல் அதிகரிக்கும் நிலை யில், பேருந்து நிலை யத்தை அடைவதற்கே பயணிகள் கூடுதல் நேரம் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து இணைப்புப் பேருந்து களை அதிகரிப்பதுடன், தேவைக்கேற்ப கூடுதல் புறப்பாட்டு இடங்களை ஏற்படுத்தவும் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் வலியு றுத்தியுள்ளனர்.

மேட்டூர் அணையில் இருந்து

டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தம்!

விவசாயிகள் வேதனை!

தஞ்சை, அக். 16 - டெல்டா மாவட்ட விவ சாயிகளின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கக்கூடிய மேட்டூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி பாசனத்திற்கு தண் ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

ஜூன் 12ஆம் தேதி திறக் கப்படும் நீரானது, ஜனவரி மாதம் 28ஆம் தேதி வரை சுமார் 200 நாட்களுக்கு மேல் பாசனத்திற்கு தண் ணீர் திறந்து விடப்படும். 7 மாதத்திற்கு திறக்கப்படும் நீரால் தமிழ்நாட்டில் குறுவை, சம்பா, தாளடி என முப்போக விளைச்சல் நடைபெறும். கடந்த ஐந்து ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இருந்ததால், தமிழகத்தில் நெல் சாகுபடி உயர்ந்து விவசாயம் செழித் தது. இந்தாண்டு, த.வெ.க. அரசு செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தது.

கர்நாடகா அரசிடம் இருந்து நீர் பெறப்படாத தால், அணையின் நீர்மட் டம் 59 அடிக்கு குறைந்து, நீர்வரத்து வினாடிக்கு 787 கன அடியாக குறைந்தது. இதனால் டெல்டா பாச னத்திற்கு திறந்து விடப்ப டும் நீர் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. போதிய நீர் இல்லாததா லும் முறையான திட்டமி டல் இல்லாததாலும் தமிழகத்தில் சம்பா சாகுபடி யும் பாதிக்கப்படும் அவல நிலை உருவாகியுள்ளதாக விவசாயி கள் தெரிவித்துள் ளனர்.

விவசாயம் மட்டுமில்லா மல், சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர் திருவா ரூர், நாகப்பட்டினம் உள் ளிட்ட பல மாவட்டங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்ப டும் அபாயம் நிலவுவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 59 அடிக்கு கீழ் சரிந் ததால், நீரில் மூழ்கியிருந்த நந்தி சிலை முழுவதும் வெளியே தெரிய துவங்கி யது. 120 அடி கொண்ட மேட்டூர் அணையின் நீர் மட்டம் 77 அடிக்கு கீழே செல்லும்போது கிறிஸ்தவ தேவாலயமும், 70 அடிக்குக் கீழே செல்லும்போது ஜல கண்டேஸ்வரர் ஆலய நந்தி சிலை தலைப்பகுதி வெளி யில் தெரியும்.

மேலும் நீர்மட்டம் 40 அடிக்கு கீழே சரிந்தால் சோளபாடியில் வீரபத்திரன் ஆலயமும், 30 அடிக்கு கீழே சரிந்தால் மீனாட்சியம்மன் ஆலயம் வெளியே தெரியும். தற்போது நீர்மட்டம் 59 அடியாக சரிந்துள்ளது. இதன் காரணமாக பண்ண வாடி நீர்தேக்க பகுதியில் நீரில் மூழ்கியிருந்த ஜலகண் டேஸ்வரர் ஆலய கோபுர மும், நந்தி சிலை முழுவதும் வெளியே தெரிய தொடங் கியது.

